5th March 1966]

Madurai	.. ..	12
Tiruchirappalli	.. ..	14
Thanjavur	.. ..	9
South Arcot	.. ..	16
Madras City	.. ..	2
Ramanathapuram	.. ..	5
Total	..	132

செங்கற்பட்டு	.. ..	13
வட ஆர்க்காடு	.. ..	22
சேலம்	.. ..	25
நீலகிரி	.. ..	1
திருநெல்வேலி	.. ..	4
கோயம்புத்தூர்	.. ..	9
மதுரை	.. ..	12
திருச்சிராப்பள்ளி	.. ..	14
தஞ்சாவூர்	.. ..	9
தென் ஆர்க்காடு	.. ..	16
சென்னை	.. ..	2
இராமநாதபுரம்	.. ..	5
மொத்தம்	..	132

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION.

LOCK-OUT IN SOMASUNDARAM MILLS, COIMBATORE.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கோவையில் சோமசுந்தரம் மில்லின் அதிபர்கள் திடீரென்று லாக் அவுட் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் படி இவ்விதம் லாக் அவுட் செய்திருப்பது சட்ட விரோதமானதாகும். இதில் அரசாங்கம் தலையிட்டு இவ்விதம் லாக் அவுட் செய்வது கூடாது என்று உத்தரவிட வேண்டும். இதனால் உற்பத்திக்கும் பாதகம் ஏற்படுகிறது. அரசாங்கம் முன்பே ஒரு கொள்கையை ஒத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பொருளாதார பலம் பெருகுவதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அந்த முறையில் பார்த்தாலும் இன்றைய தினம் இம்மாதிரி லாக் அவுட் செய்திருப்பது கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் முதலாளிகள் இம்மாதிரி லாக் அவுட்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th March 1966

நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் படிதான் இதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் இதைப்பற்றி எப்போதும் கவனித்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் இங்கு எந்த முறையில் லாக் அவுட் நடைபெற்றிருக்கிறது என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும். இதைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டால் பதில் தெரிவிக்கலாம். அதோடு இன்னும் சில தினங்களில் லேபர் டிமாண்டு வருகிறது. அதில் கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டால் அப்போது என்னிடம் இருக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டு சில விளக்கங்களை கொடுக்க முடியும். ஆகவே, இது 42-வது விதிக்குரிய மோஷன் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I withhold consent to the hon. Member to raise an adjournment motion to discuss this matter.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966–67—*cont.*

* திரு. நா. ப. செங்கோட்டுவேலு: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். இதந் வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றைக்கு நாம் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருந்த போதிலும் விவசாயிகளுக்கு நன்மை தரக் கூடிய வகையில் இதில் எந்தவிதமான திட்டமும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கம் நெல்லுக்கு நிர்ணயித்திருக்கின்ற விலைக்கும், விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற பொருட்களுக்கு இருக்கின்ற விலைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், விவசாயிகளுக்குத் தேவையான உரம், பிண்ணாக்கு, இவைகளின் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு மூட்டை நெல்லுக்கு அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை 31 ரூபாய் என்றால் பிண்ணாக்கின் விலை 40 ரூபாய் ஆக இருக்கிறது. இந்த நிலையில் விவசாயிகளுக்கு சாகுபடிக்கு ஆகின்ற செலவுக்கும் நெல்லின் விலையிலிருந்து கிடைக்கின்ற விலைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இன்றைய தினம் ஊக்கம் குறைந்து வருகிறது. எனவே, இந்த நிலைமையைப்பற்றி அரசாங்கம் தக்க விதத்தில் பரிசீலனை செய்யவேண்டும், அவ்விதம் பரிசீலனை செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய உரம், பிண்ணாக்கு, போன்றவைகளுக்கும் ஒரு விலை நிர்ணயித்துக்கொடுத்தால் விவசாயிகளுக்கு ஆகின்ற சாகுபடி செலவு ஓரளவுக்குக் குறையும். இந்த வகையில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அவர்களுக்குத் தேவையான பாசன வசதியையும்